சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 16.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 639/E/2024**

திரு.ந.இந்திராணி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட
ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
திருச்சிராப்பள்ளி- 621 010.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தின் 24.04.2025, 22.07.2025 மற்றும் 08.10.2025 ஆகிய தேதியிட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 08.10.2025 தேதியிட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.ச.அதியமான் கவியரசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருச்சி அவர்கள் சார்பு திருமதி.கீதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவெறும்பூர் அவர்கள் 05.03.2026-ல் இவ்வாணையத்தில் ஆஜராகி அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 08.10.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், துறையூர் கிராமம், பழைய புல எண்.517, பட்டா எண்.264, புல எண்.518, பட்டா எண்.2265-ன் பைமாஸ்/ SLR ஆவண நகல் பொதுத் தகவல் அலுவலரின் ந.க.உ4/RTI/960/44308/2023, நாள் 05.11.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும், இவ்வழக்கில் மனுதாரரால் குறிப்பிட்டுக் கோரப்படும் புல எண்ணுக்கான SRL பதிவேட்டில், பைமாஸ் எண் பதிவு உள்ளதில் பட்டாதாரர் பெயர் ஏதும் இடம்பெறவில்லை என்பதற்கான ஆணை உறுதி பிரமான பத்திரமானது ஏற்கனவே பொதுத் தகவல் அலுவலரின் 29.09.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது.

3. எனவே, வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 639/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி- 621 010.

**மேல்முறையீட்டாளர்**

திரு.ந.இந்திராணி, த/பெ.T.V.நடராஜன்,
734, நேதாஜி தெரு, மதுராபுரி கிராமம்,
துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம் - 621 010.

Copy to: File MP/PA,